**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUVOTTIYUR**

| | | |
|---|---|---|
| **Calendar** | **:** | |
| **Miscellaneous** | **:** | |
| **Preliminary Register** | **:** | **Case No. CC/213/2024** |
| **Sessions** | **:** | |
| **Deposition of witness for** | **:** | **Prosecution PW 3 / LW 3** |
| **Name** | **:** | திரு. N. தங்கராஜன் |
| **Father's/Husband's Name** | **:** | திரு. S. நாராயணசாமி |
| **Village** | | |
| **Taluk** | .. | |
| **Caste** | .. | |
| **Calling** | .. | |
| **Religion** | .. | |
| **Age** | .. | **76** |

**Date: 24/11/2025**

**(Solemnly affirmed before this court under act X of 1969)**

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர் ஆகவில்லை. வழக்கறிஞரால் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

6. மேற்கண்ட காரியங்கள் நடந்ததற்கான மூலகாரணங்கள் பின்வருமாறு. எனது மகளது திருமணத்திற்காக வேண்டி 26.02.2020 ல் ஆறு மாதங்களுக்கு முன்பே எனது மகளை பெண்கேட்டு கார்த்திகேயன் என்பவர் பாரதி என்ற பெண்ணுடன் வந்து எனது

மனைவியிடம் பேசி, மேலும் எனது மருமகனுக்கு போதிய விடுப்பு வசதி இல்லை என்றும் திருமணத்திற்கு முதல் நாள் வருவார். தற்சமயம் நிச்சயம் செய்து கொள்ளலாம் என்று கேட்ட போது எனது மகள் எனது மருமகனை பார்க்காமல் திருமண நிச்சயதார்த்ததிற்கு ஒப்புக்கொள்ளாத நிலையில் எனது மருமகன் நிச்சயத்திற்கு முன்பு ஒரு வாரகாலத்திற்கு முன்பே அவருக்கு ஏற்பட்ட முடக்குவாதம் தொடர்பாக ஆகாஸ் மருத்துவமனை, திருவொற்றியூரில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்று வந்துள்ளவரை கட்டாயமாக Discharge செய்து 26.02.2020ல் நிச்சயத்தின் போது அட்வகேட் சம்பத்குமார் மற்றும் அட்வகேட் விஜயலட்சுமி ஆகிய இருவரும் எனது மருமகனுடன் இருந்த போது எனது மகள் சந்தேகத்தின் அடிப்படையில் எனது மருமகனிடம் உடல் நல கோளாரு எதுவும் உள்ளதா என கேட்ட போது உடனிருந்த அட்வகேட்டுகள் மற்றும் நாகலட்சுமி என்பவர் தாய், தந்தை இல்லாமல் சரியான உணவு கிடைக்காமல் இருந்ததால் இவ்வாறு உள்ளார் என்றும், போதிய கவனிப்பு இருந்தால் எல்லாம் சரியாகி விடும் என்றும் கூறி எனது மருமகனை ஏற்கனவே மிரட்டி அடித்து பேசவிடாமல் செய்து விட்டனர். நிச்சயத்தின் போது தான் கார்த்திகேயனின் உண்மையான மனைவி நாகலட்சுமி என்பதும் பாரதி என்பவரை போலியாக செட்டப் செய்து தனது மனைவி என நடிக்கவைத்து ஏமாற்றியுள்ளார்.

7. 05.03.2020ல் திருமணத்தின் போது எனது மருமகன் எனது மகளுக்கு தாலிகட்ட இயலாத நிலையில் தான் எனது மருமகனின் குறைபாடு எனது மகளுக்கு தெரியவந்தது. 05.03.2020லேயே எனது மகளை சென்னையில் குடிவைத்து 06.03.2020ல் வெங்கடேசன் என்பவர் எனது மருமகன் அறைலிருந்து ரூபாய் ஒரு லட்சம் ரொக்கம் (

ரூபாய் 500 கட்டு 2 ) எடுத்துச்சென்று விட்டார். கார்த்திகேயன் மற்றும் வெங்கடேசன் எனது மருமகனை அழைத்துச் சென்று வங்கி மூலம் ரூபாய் இரண்டரை லட்சம் வரை எடுத்து மோசடி செய்துள்ளனர். மேலும் எனது மருமகனது திருமணத்திற்கு பின்பு முதிர்வடைய கூடிய நிரந்தர வைப்புத்தொகை ரூபாய் இரண்டு லட்சத்தை முதிர்வுக்கு முன்பே முடிவுக்கு கொண்டு வந்து எடுத்துக்கொண்டுள்ளனர்.

8. திருமணத்திற்கு பின்பு எனது மகளால் எனது மருமகன் தொடர்பாக உள்ள வரவு செலவு கணக்குகள் மற்றும் அவரது தாய் தகப்பன் சொத்துக்கள் மற்றும் முதாதையர் சொத்துக்கள் தொடர்பாக விபரம் சேகரித்து மேற்படி வெங்கடசேன் மற்றும் கார்த்திகேயன் என்பவர்களிடம் கேட்ட போது மேற்படி கார்த்திகேயன் எனது மருமகனிடம் நீ சரஸ்வதியுடன் வாழாதே உன்னை ஒரு காரியம் நிறைவேற்ற வேண்டிதான் இந்த திருமணம் செய்துவைத்துள்ளேன். உனக்கு வேறு பெண் பார்த்து திருமணம் செய்து வைக்கிறேன் என்றும் கூறியுள்ளார்.

9. மேற்படி தகவல் அறிந்த எனது மகள் காவல் துறை மற்றும் இதர உயர் அதிகாரிகள் மூலம் இழந்த தொகை ரூபாய் எழுபது லட்சம் Axis வங்கி Statement மூலம் ஆதாரமாக திறட்டப்பட்டது. மற்றும் திருமண நிச்சயதார்த்தத்தின் போது கூறப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டி காரியங்கள் செய்த நிலையில் மேற்படி எதிரிகள் திட்டமிட்டு செய்த மோசடியை ஞாயப்படுத்தும் வகையில் செயல்பட்டும் உள்ளனர்.

10. மேற்படி வெங்கடேசன் என்பவர் எனது மகளிடம் தகாத முறையில் நடந்து கொள்ள முயற்சி செய்ததின் காரணத்தினால் இதன் தொடர்பாக காவல் கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு மேற்படி வெங்கடேசன் என்பவர் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளார். மேலும், எனது மகளை பஜனை கோவில் தெருவில் இருந்த வீட்டிலிருந்த போது முகத்தில் தலையணையை வைத்து எனது மகளை கொலை செய்ய முயற்சி செய்த சமயம் தற்செயலாக நான் அங்கு சென்றதால் அந்த முயற்சி தோல்வி அடைந்து விட்டது.

11. மேற்கண்ட காரணங்கள் அடிப்படையில் ஏற்பட்ட வன்மத்தினால் மேற்படி கார்த்திகேயன் மற்றும் அட்வகேட்டுகள் தஞ்சாவூர் மாவட்ட நீதிமன்றத்தில் உள்ள PP மூலம் எண்ணூர் ACP அவர்களை தொடர்பு கொண்டார். எனது மருமகனை எனது மகள் அடித்து துன்புறுத்துவதாகவும், உடன் நடவடிக்கை எடுக்க கோரிக்கை விடுக்கப்பட்ட நிலையில் ACP அவர்களின் விசாரணையின் போது எனது மகளது தரப்பில் உள்ள உண்மை நிலையை அறிந்து மேற்படி கார்திகேயனை ACPயின் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு கூறப்பட்ட போது அதனை மறுத்து மேற்படி கார்த்திகேயன் எனது மகளை மண்ணார்குடிக்கு அனுப்பிவைக்குமாறும், அங்கு வைத்து பஞ்சாயத்து பேசி தீர்த்துகொள்வதாகவும், கூறிய நிலையில் ACP அவர்கள் எனது மகளை அனுப்பிவிட்டார்.

12. மேற்கண்ட தகவல் அறிந்த கார்த்திகேயன் உடன் எண்ணூர் அசோக் லேலாண்ட் யூனியன் நிர்வாகிகளிடம் பேசி எனது மகள் மீது எழுத்து பூர்வமாக புகார் அளித்து உடன் நடவடிக்கை எடுக்க

கேட்டுக்கொண்டதன் பேரில் மேற்படி யூனியன் நிர்வாகிகனான சசி என்று அழைக்கப்படும் சசிக்குமார் மற்றும் எபினேசர் ஆகியோர்கள் காவல் நிலையம் வந்து எனது மருமகனிடம் கட்டாயப்படுத்தி கையெழுத்து பெற்று புகார் அளித்தனர். எனது மகளும் ACP அவர்களிடம் நடந்த சம்பவங்கள் தொடர்பாக எழுத்து பூர்வமான புகார் அளித்த நிலையில் மேற்படி யூனியன் நிர்வாகிகள் விசாரணை அதிகாரியிடம் எனது மருமகன் எனது மகளை விவாகரத்து செய்ய உள்ளதாகவும் உடனடியாக எனது மகளை வீட்டிலிருந்து வெளியேற்றிவிட வேண்டும் என்று கூறிய போது விசாரணை அதிகாரியானவர் ஒரு வருட காலத்திற்குள் விவாகரத்து செய்ய முடியாது என்றும். இதனை நீங்கள் வலியுருத்தினால் இரண்டு தரப்பினர் மீதும் FIR போட்டு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி இதன் தகவலை கம்பெனி நிர்வாகத்திற்கு தெரியப்படுத்துவேன் என்று கூறிய போது உடன் சமாதானம் செய்து இரண்டு தரப்பினர்களும் வழக்கில் மேல் நடவடிக்கை தேவையில்லை என்று எழுதி வாங்கப்பட்ட மேற்படி ஆவணங்கள் எண்ணூர் காவல் துறை வசம் உள்ளது.

13. கடந்த 10.102022ல் எண்ணூர் ACP அலுவலகத்தில் நடைபெற்ற விசாரணையின் போது வெங்கடேசன் என்பவர் ACP அவர்களிடம் தனது தாய் மாமான் கார்த்திகேயன் என்பவர் குடும்ப விவகாரம் என்பதால் சமாதனம் பேசி முடிவு செய்ய உள்ளதாக கூறிய போது எனது மகள் ACP அவர்களிடம் மேற்படி கார்த்திகேயனை ACP முன்னிலையில் அழைத்து எண்ணூரில் சமாதானம் பேசிக்கொள்ளலாம் என்று எனது மகள் கூறிய போது ACP அவர்கள் கட்டாயப்படுத்தி என்னை மண்ணார்குடிக்கு அனுப்பி வைத்தார்.

14. கடந்த 16.10.20122ல் எனது மகள் மண்ணார்குடி சென்று சமாதானம் பேச முயன்ற போது மேற்படி கார்த்திகேயன் கூலிப்படையினரை அமர்த்தி காவல் துறை பாதுகாப்புடன் எனது மகளது குடும்பத்தை கொலை செய்த முயற்சி செய்த நிலையில் வாரிசாக உள்ள எனது பேரன் அங்கு இல்லாத நிலையில் எனது மகள் கடுமையாக தாக்கப்பட்டு மண்ணார்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயளியாக மூன்று நாட்கள் சிகிச்சை பெற்று திரும்பியுள்ளார்.

15. 16.10.2022 சம்பவம் தொடர்பாக மண்ணார்குடி நகர காவல் துறையினரால் 17.10.2022ல் CSR போடப்பட்ட 04.12.2022 அன்று FIR போடப்பட்டது. மேற்படி FIR தொடர்பாக இது நாள் வரை எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தற்சமயம் மேற்படி FIR முடிவுக்கு கொண்டுவரப்பட்டதாகவும். காரணம் எனது மகளுக்கும் மருமகனுக்கும் இடையே விவாகரத்து ஆகிவிட்டதாகவும், அதன் அடிப்படையில் மேற்படி FIR முடிவுக்கு கொண்டுவரப்பட்டது என்று மண்ணார்குடி நகர காவல்துறையினரால் பேசப்பட்ட போது எனது மனைவியால் தெரிந்துகொள்ளப்பட்டது.

16. பார் கவுன்சில் நடவடிக்கைகள் தொடர்பாக

A. 10/2021ல் அட்வகேட் விஜி மற்றும் அட்வகேட் சம்பத்குமார் ஆகியோர்கள் மீது கொடுக்கப்பட்ட புகார்மனு பார்கவுன்சில் விதிகளின் படி 30 நகல்கள் எடுக்கப்பட்டு ரூபாய் ஆயிரத்து எழுநூற்று ஐம்பது வங்கி விவரங்கள் மூலம் கொடுக்கப்பட்டது.

B. 12/2022ல் எனது மகளது புகார் மனு எண். 375/2021 என தகவல் அளிக்கப்பட்டுள்ளது.

C. பார்கவுன்சில் Speaking Resolution No. 175/2022 நாள் 04.03.2022ன் படி எனது மகளது மனு நிராகரிக்கப்பட்டுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

D. இதே பார்கவுன்சிலில் 375/2021 ஆக உத்தம பாளையம் Advocate Association தரப்பிற்கு அளிக்கப்பட்டு 02.07.2022 கவுன்டர் என தகவலும் அளிக்கப்பட்டுள்ளது.

E. எந்த வகையில் மேற்படி 375/2021 எண்ணானது இரண்டு வேறுபட்ட நபர்களுக்கு ஒரே நம்பரில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தவறானதாகும்.

F. 04.03.2022ல் பார்கவுன்சில் தீர்மானமானது சரியான முகவரிக்கு அனுப்பபடாமல் வேண்டுமென்றே திட்டமிட்டு தவறான முகவரிக்கு அனுப்பப்பட்டு பார்கவுன்சிலால் திரும்ப பெறப்பட்டுள்ளது.

G. மேற்படி 04.03.2022ன் தீர்மான எண். 175/2022ன் படி ஒரு வழக்கிற்கு சராசரியாக 2.4 நிமிடங்கள் எடுக்கப்பட்டு முன் கூட்டியே திட்டமிடப்பட்ட நடவடிக்கை ஆகும்.

H. எனது மகளது RTI மனு 07.12.2022 மேற்படி மனு ஆனது முறைப்படி பார்கவுன்சில் நிர்வாகத்தினரால் பதிவு செய்யப்படவில்லை.

கடந்த 10.1.2023ல் எனது மகள் பார்கவுன்சிலில் பிரச்சனை செய்த போது எழுத்துப்பூர்வமாக தெரிவிக்கவும், அதன் அடிப்படையில் உரிய ஆதாரம் பெற்றுக்கொள்ள அறிவுறுத்தப்பட்ட நிலையில் எழுத்துப்பூர்வமாக மனு கொடுத்து ஆதாரம் பெறப்பட்டது.

I. எனது மகளுக்கு 10.10.2023ல் ஒப்புகை சீட்டு அளிக்கப்பட்டதன் பின்பு 07.12.2022 RTI மனுவிற்கு 09.01.2023ல் மனு எண் 9 என கொடுக்கப்பட்டு 09.01.2023லேயே பார்கவுன்சில் ஆப் இந்தியாவிற்கு மேல் முறையீடு செய்துகொள்ள அறிவுறுத்தப்பட்டு தகவல் அனுப்பப்பட்டுள்ளது.

J. எனது மகளால் இரண்டாம் மேல் முறையீட்டு மனு மாநில தகவல் உரிமை ஆணையத்தில் அளிக்கப்பட்ட SA 7052/A /2023 நாள். 10.08.2023 ல் வழங்கப்பட்ட தீர்பானையின் படி 07.12.2022 மனுவின் படி உள்ள தகவல்களை அளிக்கும் படி ஆணை ஏற்பட்டுள்ளது.

K. உதவி பதிவாளர் (personal Administration) உயர் நீதிமன்றம், சென்னை அவர்களால் ROC/32860/2023 தபால் நாள். 12.09.2023ன் படி இனம் Aயில் கண்ட தகவல் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. J மற்றும் Kயில் உள்ள தகவல்கள் ஏதும் இது நாள் வரை எனது மகளுக்கு அனுப்பப்படவில்லை.

L. இனம் J மற்றும் K தொடர்பாக தமிழ்நாடு மாநில தகவல் உரிமை ஆணையத்தில் இரண்டாம் மேல் முறையீடு எண் 1347/2023

ஆக பதிவு செய்யப்பட்டு இது நாள் வரை எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை.

17. DGP சென்னை அவர்களுக்கு எனது மகளால் நேரடியாக அளிக்கப்பட்ட மனுக்கள் C நம்பர் 112/2024 , நாள் 29.01.2024. C நம்பர் 230/2024 , நாள் 29.05.2024 . C நம்பர் 1509/2024 , நாள் 14.10.2024 . மேற்படி எனது மகளது மனுக்களுக்கு இது நாள் வரை எந்த ஒரு விசாரைணையோ அல்லது மனு தொடர்பான முடிவு ஏதும் அளிக்கப்படவில்லை.

18. COP, ஆவடி அவர்களுக்கு எனது மகளால் நேரடியாக அளிக்கப்பட்ட மனுக்கள் C நம்பர் 2339/2023 , நாள் 20.09.2023. C நம்பர் 2518/2023 , நாள் 04.10.2023 . C நம்பர் 2518/2023 , நாள் 25.10.2023. C நம்பர் 2518/2023 , நாள் 22.12.2023. C நம்பர் 666/2024 , நாள் 01.03.2024 . 2518/2023 என்றுள்ள எண்ணானது மூன்று முறை வெவ்வேறு தேதிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி எனது மகளது மனுக்களுக்கு இது நாள் வரை எந்த ஒரு விசாரைணையோ அல்லது மனு தொடர்பான முடிவு ஏதும் அளிக்கப்படவில்லை.

19. தமிழ் நாடு மாநில பெண்கள்ஆணையத்தில் கடந்த 30.05.2023ல் எனது மகளால் கொடுக்கப்பட்ட மனுவிற்கு ஆணைய வழக்கு எண் 2815/2023ன் படி 04.07.2023 ல் விசாரணைக்கு யாரும் ஆஜராகவில்லை என்ற நிலையில் ஆவடி மாநகர காவல் ஆணையருக்கு 2815/2023, நாள். 21.08.2023ல் விசாரணை செய்து அறிக்கை அனுப்ப கோரப்பட்டது. எந்த ஒரு விசாரணையும் காவல் துறையினரால் நடத்தப்படாத

நிலையில் 2815/2023, நாள். 17.05.2024ல் காவல் துறை குற்றப்பிரிவு ஆய்வாளர், எம்.5 எண்ணூர் அவர்களை விசாரணைக்கு அழைத்த போது தான் வேறு பணியில் இருப்பதாக கூறி விசாரணைக்கு ஆஜர் ஆவதை தவிர்த்துவிட்டார். மீண்டும் ஆணையத்தின் மூலம் DCP செங்குன்றம் அவர்களை எம். 5 எண்ணூர் காவல் நிலைய ஆய்வாளருடன் ஆஜராக சம்மன் அனுப்பப்பட்டது. அன்றைய தினம் DCP அவர்கள் ஆய்வாளர் விடுப்பில் சென்றுள்ளார் என்று மகளிர் ஆணையத்திடம் தகவல் அளித்துள்ளார். காவல் துறை ஆய்வாளர் வேண்டுமென்றே திட்டமிட்டு மகளிர் ஆணையத்தில் குற்றவாளிகளுக்கு ஆதராக செயல்பட வேண்டி விசாரணைக்கு ஆஜர் ஆவதை தவிர்த்துள்ளார்.

(போதிய நேரமின்மை காரணமாக வழக்கானது மறு தேதியிட்டு ஒத்திவைக்கப்படுகிறது).

K KARTHIK

Digitally signed by K KARTHIK
Date: 2025.11.24 16:58:25 +0530

நீதித்துறை நடுவர்,

திருவொற்றியூர்